

சரவணபவா & யூனிட்டி பிக்சர்ஸ்

நான் வளர்த்த தங்கை

டைரக்ஷன் : Ch. நாராயணமூர்த்தி B.A.

சரவணபவா & யூனிட்டி பிக்சர்ஸ்

தயாரித்த

நான் வளர்த்த தங்கை

நடிகர்கள்

பிரேம் நஸீர்	....	*சுந்தரம்*
V. நாகையா	....	*சண்முகம் பிள்ளை*
S. V. சுப்பையா	....	*கணக்கப் பிள்ளை*
T. K. ராமச்சந்திரன்	....	*சங்கர்*
V. R. ராஜகோபால்	....	*காடுவெட்டி [ஹா ஹா]*
V. M. ஏழுமலை	....	*சாமியா பிள்ளை*
M. R. சாமிநாதன்	....	*காசீம் சாயபூ*
M. R. சந்தானம்	....	*கோவிந்தம் பிள்ளை*
சேதுபதி	....	*சுப்பையா பிள்ளை*
தங்கவேலு	...	*சத்திர மேனேஜர்*
சங்கரமூர்த்தி	....	*வேலைக்காரன்*

நடிகைகள்

பண்டரிபாய்	....	*பார்வதி*
மைனவதி	....	*பத்மா*
டெய்ஸி இரானி	...	*பெரிய முரளி*
ஹனி இரானி	...	*சின்ன முரளி*
சுந்தரிபாய்	...	*உண்ணமலை*
சூர்யகலா	...	*லில்லி*
K. N. கமலம்	...	*வள்ளியம்மாள்*

நடனம்

ஹெலன் - லக்ஷ்மிராஜ்யம் - ரெட்டி

மேஜிக்

மெஸ்திரி

டைரக்ஷன்

Ch. நாராயணமூர்த்தி, B.A.

அஸோஸியேட் டைரக்ஷன் : T. K. ராமசாமி (ராமு)

மூலக்கதை :	P. A. பத்பனாப ராவ், B.A.LL.B.
வசனம் :	ரா. வே.
உதவி :	P. A. தாஸ்
பாடல்கள் :	தஞ்சை ராமையாதாஸ் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
சங்கீதம் :	பெண்டியாலா
நடன அமைப்பு :	கோபாலகிருஷ்ணன், சோப்ரா, வேணுகோபால்
ஒளிப்பதிவு :	P. ராமசாமி
ஒலிப்பதிவு :	V. C. சேகர்
எடிட்டிங் :	K. கோவிந்தசாமி
ஆர்ட் டைரக்ஷன் :	S. V. S. ராமா ராவ்
செட்டிங்ஸ் :	S. ரங்கசாமி
உடை அலங்காரம் :	P. ராமகிருஷ்ணன்
ப்ளோர் இன்சார்ஜ்:	C. C. அந்தப்பன், R. N. ராவ்
பாடல்கள் ஒலிப்பதிவு :	E. I. ஜீவா *(பாரமவுண்ட் ஸ்டுடியோ)* R. கண்ணன் *(ரேவதி)*
மேக்கப் :	R. ரங்கசாமி, K. ராமன், R. பத்மனாபன்

புரொடக்ஷன் மேற்பார்வை

C. சுந்தரம்

நிர்வாகம் :

A. K. பாலசுப்ரமண்யம், C. சுந்தரம்,
A. கோவிந்தசாமி

ஆபீஸ் நிர்வாகம் :

B. தர்மராஜ்

உதவி :

G. K. சேஷாத்திரி

புரொடக்ஷன் மேனேஜர்கள் :

P. ரங்கராஜ், லக்ஷ்மி நரஸிம்மன்

ஸ்டில்ஸ் :

R. N. நாகராஜ ராவ், K. விஜயகம்

★

உதவியாளர்கள் :

டைரக்ஷன் :

A. K. சுப்ரமணியம்

ஒளிப்பதிவு :

P. G. சுதர்ஸன், **N.** சந்திரசேகரன்.

ஒலிப்பதிவு :

M. V. சங்கர், **K. K.** வேலாயுதம்.

எடிட்டிங் :

M. கண்ணன், **T. P.** வேலாயுதம்.

உடை அலங்காரம் :

T. கெஜராஜன், **T. M.** சாமிநாதன், **S. A.** சீனுவாசன்

மேக்கப் :

A. V. சந்தானம், **V. S.** தருமன்

புரொடக்ஷன் :

N. பழனியப்பன், **C. S.** மணி, **V.** முத்து. **K.** முத்து

செட் ப்ராபர்ட்டீஸ் : ***சினி க்ராப்ட்ஸ்.***

லேபரட்டரீஸ் : **A. V. M. லேபரட்டரி**

ஸ்டுடியோ : **நெப்டியூன்**

நான் வளர்த்த தங்கை

மகிழ்ச்சியும், பாசமும் கூடிக்குலாவும் ஒப்பற்ற இன்பச் சோலையே குடும்பம்! சில சமயங்களில் வஞ்சகர்கள் தங்கள் சுயநலம் ஈடேற, அந்த இன்பச்சோலையிடையே புகுந்து துன்பக் களமாக மாற்றி விடுகின்றனர். இதனுல் ஒன்றுபட்ட ஜீவன்கள் துண்டு பட்டு அவதிப்படும் துடி துடிப்பை சொல்லி முடியாது? இத்தகைய பரிதாப நிலைக்கு பலியான குடும்பங்களில் பார்வதியின் குடும்பமும் ஒன்று. படத்தை பார்த்த பின்பாவது வஞ்சக சூட்சியாளர்கள் திருந்துவார்களானுல், அதுவே எங்கள் சிறிய சேவைக்கு கைம்மாறு கிடைத்ததாகக் கருதுவோம்.

*   *   *

கதை

பார்வதி :—

செல்வமும், செல்வாக்கும் நிறைந்த குடும்பம், எங்கள் குடும்பம். சிறுவயதிலேயே என் தாய் இறந்து விட்டார்கள். தாய் முகம் கண்டறியாத என் ஒரே தங்கை பத்மாவை, தாய்ப் பாசத்துடன் நான் வளர்த்து வந்தேன். அவளும் என்மீது தன் உயிரையே வைத்திருந்தாள். எங்கள் இருவரது நலமே தன் லட்சியமாகக் கொண்டிருந்தார், எங்கள் தந்தை சண்முகம் பிள்ளை.

எனக்கு நல்ல இடத்தில் தான் மணமாகியது. ஆனுல் துரதிருஷ்டவசமாக என் கணவரின் அரவணைப்புக்கு நான் ஏங்கித் தவிக்க நேர்ந்து விட்டது. என்னையும், என் மகன் முரளியையும் பார்க்கப் பார்க்க என் தந்தை சண்முகம் பிள்ளை யின் பாசவிழிகள் கண்ணீரில் மிதந்தன. ஆனுல், பத்மாவிற்கு சுந்தரம் என்ற சுந்தரமான வாலிபர் கணவனுகக் கிடைத்தார். இது எங்கள் தந்தைக்கு பரம திருப்தியையும், ஆறுதலையும் அளித்தது. எங்கள் சொத்தின் மீது ஆசை கொண்டு தன் தம்பி காடுவெட்டிக்கு, பத்மாவை, மணம் முடிக்க நினைத்த தூர உறவினள் உண்ணுமலைக்கு, இது பெரும் ஏமாற்றத்தை அளித்தது.

இதே நேரத்தில் – அந்தோ! சொல்லவே என் நெஞ்சு குமுறுகிறது. மங்கையருக்கு அழகு தரும் எஞ்சியிருந்த மஞ்சள் கயிறையும் நான் பறிகொடுத்து விட்டேன். இதைக் காணச் சகியாத என் தந்தை படுத்த படுக்கையாகி, சாவின் முத்தத் தையும் தொட்டுவிட்டார். அவர் கண்ணை மூடும் முன் கடமை

மறவாது என்னையும், என் செல்வனையும்—என் தங்கை பத்மா விடமும், அவள் கணவர் சுந்தரத்திடமும் ஒப்படைத்து சென்றார்.

இனி வாழ்வே இருண்டு விட்டதாகத் தோன்றிய எனக்கு ஒளியாக இருந்து உதவியது, என் தங்கையின் பாசம். சுந்தரமும் முரளியை தன் செல்வமாக வளர்த்து வந்தார். குடும்ப பொறுப்பை எல்லாம் நானே முழு உரிமையுடன் கவனித்து வந்தேன். குடும்பத்தில் அமைதி தலைதூக்கும் நல்ல நேரத்தில் - உள்ளமும், உதடும் வேறாகக் கொண்ட உண்ணமலை விரித்த வலையில் அகப்பட்டாள் பத்மா.

தேனைக இனித்த நான், தேளின் கொடுக்காக மாறினேன் அவளுக்கு. அவள் மன திருப்திக்காக, என் நெஞ்சை கல்லாக்கிக்கொண்டு, வீட்டைவிட்டு வெளியேறி மகனுடன் நான் புக்ககத்திற்கு சென்றேன். நேர்மையின் வடிவமான சுந்தரம், முரளிமீதும், என் மீதும் கொண்ட பாசத்தினால், எங்களைக்காண அடிக்கடி கிராமத்திற்கு வந்து போனார். இதன் விளைவு?

உடன் பிறந்தவளே நெஞ்சு துணிந்து என் மீது களங்கம் சூட்டும்போது, அன்னியரைப்பற்றி கேட்கவாவேண்டும்? கயவர்களின் வீண்வதந்திக்குப் பலியாகி சரண்புகுந்த புக்ககத்திலும் நான் வாழ முடியாமல், என் மகனுடன் வெளியேறும் நிர்ப்பந்தமேற்பட்டது. இந்த விபரமறிந்த சுந்தரம், பத்மா எவ்வளவு தடுத்தும்—என் தந்தைக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றும் உறுதியுடன் எங்களைத் தேடி வீட்டை விட்டு வெளியேறினார். அவர் எங்களை சந்திக்கும் முன், வெகு தூரம் நாங்கள் போய்விட்டோம்.

கால் போன பாதையில் நடந்த என்னை விதி, அங்கும் சும்மா விட்டதா? தாய்வேறு, மகன் வேறாகப் பிரித்தது. அதீத புத்திர பாசத்தினால் நான் பைத்தியமானேன்.

* * *

பைத்தியம் பிடித்த பார்வதி குணமடைந்தாளா? கடைசியில் சுந்தரம் அவளைக் கண்டு பிடித்தானா? ஆளுக்கொரு மூலையில் திரிந்தவர்கள் ஒன்று சேர்ந்தார்களா? சாகாவரம் பெற்ற பிறவிப்பாசத்தை வஞ்சகத்தால் வெல்ல முடிந்ததா?

விபரங்களை திரையில் காண்க!

நான் வளர்த்த தங்கை

பாடல் 1

இயற்றியது :
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாடியவர் :
P. லீலா

பார்வதி :

அம்மா துளசி
உண்மையின் அரசி
அனைத்தும் உனதருளம்மா— [அம்மா]

அகிலமும் நீயே ஆதியும் நீயே
ஆண்டருள்வாயே அன்பெனும் தாயே
நிதமுமென் வாழ்வில் நிலையான தாயே [நிதமுமென்]
நினைவிலும் கனவிலும் நீயே துணை— [அம்மா]

மானமும் பெண்மையும் குலப்பண்பும் பொங்க
தேன்மொழிச் செல்வனைத் தாலாட்டிக்கொஞ்ச
[மானமும்]

மங்கல நாணும் மஞ்சளும் வாழ
மன இருள் நீங்கி மகிழ்ந்தென்றும் வாழ
வழி புரிவாய் ஜோதி நீயே துணை— [அம்மா]

பாடல் 2

இயற்றியது :
தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர்கள் :
ஜிக்கி & S. C. கிருஷ்ணன்

முத்தையா :

ஒட்டு மாம்பழத்தைப் போலே
உள்ளம் ரெண்டும் சேர்ந்ததாலே
சிட்டுப்போலவே பறந்து ஓடுவோம்—நம்
இஷ்டம் போல தீம்தடக்கா போடுவோம் (ஒட்டு)

பேச்சி: மத்தியான வேளையிலே செல்லமாமா—(மத்தி)—நீ
மாமரத்து சோலையிலே துள்ளலாமா.............

முத் : பத்து நாளாத் தூக்கமில்லே வள்ளி ராணி

பேச்சி: *ஹா! ஹா ஹா!*

முத்: *பத்து நாளாத் தூக்கமில்லே வள்ளி ராணி—உன்*
பக்தன்மேலே பாஞ்சிடாதே அல்லிராணி [ஓட்டு]

பேச்சி: *கன்னிப் பெண்ணைக் கண்ணடிச்சுக் காட்டலாமா*

முத்: *மெய்க் காதலையும் சிறையில் வச்சுப் பூட்டலாமா*

பேச்சி: *அன்பு முத்தி ஆசையாலே*
ஆசை முத்திக் காதலாலே [அன்பு]

ஆளக்குல்லா போட்டுட்டியே மச்சான்! மச்சான்!!
மச்சான்!!! இங்கே [ஓட்டு]

முத்: *ராசி பலன் கேட்டுக்கிட்டு*
ராவு காலம் பாத்துக்கிட்டு
தாலியோட வந்திருக்கேன் குள்ளத்தாரா

பேச்சி: *அப்படியா?*

முத்: *பின்னே எப்படியாம்?*

பேச்சி: *கண்ணுன மாமரமே நீசாட்சி—எங்க*
கல்யாண விஷயம் முடிஞ்சுபோச்சு

இருவரும்:

ஒட்டுமாம்பழத்தைப் போலே
உள்ளம் ரெண்டும் சேர்ந்ததாலே
சிட்டுப்போலவே பறந்து ஓடுவோம்—நம்
இஷ்டம்போல தீம்தடக்கா போடுவோம்
தீம்தடக்கா! தீம்தடக்கா! தீம்தடக்கா தீம்

பாடல் 3

இயற்றியது:
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாடியவர்:
P. சுசீலா

பத்மா:

இன்ப முகம் ஒன்று கண்டேன்—கண்டு
எதுவும் விளங்காமல் நின்றேன்—அதை
இரவே உன்னிடம் சொல்ல வந்தேன்—நான் [இன்ப]

தேடாமல் அலையாமல் நேரிலே—சுகம்
ஓடோடி வந்தது வாழ்விலே [தேடா]
மனம் ஆனந்தம் பாடுவதேனோ—இது
ஆரம்ப ஜாடைகள் தானோ—இன்று [இன்ப]

தோன்ருத நினைவெல்லாம் தோன்றுதே—கண்கள்
தூங்காமல் ஆசையைத் தூண்டுதே
[தோன்ரு]—அது
ஏனென்று கேட்கவும் ஓடுதே—புது
நாணம் வந்தே தடை போடுதே—பொங்கும்
[இன்ப]

பாடல் 4

இயற்றியது :
பட்டுக்கோட்டை கலயாணசுந்தரம்

பாடியவர்கள் :
T. M. சௌந்தரராஜன்
& P. சுசீலா

பத்மா : ஆண்கள் மனமே அப்படித்தான்—அது
அடிக்கடி மாறும் இப்படித்தான்—இந்த— [ஆண்]

திருமணமாகிடும் முன்னே ஒன்றும்
தெரியாதவர் போல் இருப்பாங்க
திருமணமாகி மனைவியைக் கண்டால்
வெடுக்கின்னு முறைப்பாங்க

சுந்தரம்: ஹாஹா !

பத் : ஆண்கள் மனமே அப்படித்தான்
அது அடிக்கடி மாறும் இப்படித்தான்

சுந் : பெண்கள் குணமே அப்படித்தான்—அதன்
பேச்சும் போக்கும் இப்படித்தான்—இந்த [பெண்]

மணமாகு முன்னே வாயும் பேசாமல்
மதிப்பு மரியாதை தருவாங்க—திரு
மணமான பின்னே வரிந்து கட்டிக்கொண்டு
குஸ்திக்கும் வருவாங்க

பத் : ஓஹோ ஹோ ஹோ !

சுந் : பெண்கள் குணமே அப்படித்தான்—அதன்
பேச்சும போக்கும் இப்படித்தான்

பத் : அன்பு கனிந்திடக் கைகளை நீட்டி
அருகினில் வருவாங்க

சுந் : ஓஹோ !

பத் : இன்ப வாழ்வில் சில நாட்களானபின்
எட்டியும் போவாங்க [ஆண்]

சுந் : போட்டா போட்டியில் பெண்களுக்குள்ளே
பொருமையடைவாங்க

பத் : ஆமா !

சுந் : போறப்போகுதுன்னு ஆண்கள் இருந்தால்
பொறுமையைக் குடைவாங்க [பெண்]

பத் : மானே தேனே என்பதெல்லாம்
ஒரு மாதம் சென்றதும் மாறிடுதே

சுந் : வணக்கமும் பயமும் பக்திகளும்
ஒருவாரம் சென்றதும் ஓடிடுதே

பத் : ஹா... ஹா... ஹா...
ஆமைகளென்றே பெண்களை எண்ணி
ஆட்டம் போடுவாங்க
அதுவும் போதாமல் சமயம் பார்த்தே
அடிக்கவும் துணிவாங்க [ஆண்]

சுந் : இந்த பெண்கள் குணமே அப்படித்தான்—அதன்
பேச்சும் போக்கும் இப்படித்தான்

பாடல் 5

இயற்றியது : பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாடியவர் : கண்டசாலா

தொகையறு

கற்பின் இலக்கணமே களங்கமில்லாத் திலகமே !
தீபமே பெண் தெய்வமே—உன்
கண்ணிலே நீர் பெருகக் கவலையிலே மனம் உருக
கடும் பயணம் போவதெங்கே
கடும் பயணம் போவதெங்கே......................

பாட்டு

பெரும் பாசமே இழந்து—மனம்
பாதியில் ஒடிந்து—உன
தாசைக் கலசமே நொறுங்கியதா [பெரும்]

சொந்தமும் பந்தமும் சுகங்களும் அன்பும்
சூழ்ந்துகொண்டே தினம் பாராட்டும்... [சொந்த]
இன்பமென்றுனை நம்பவைத்துமே
இடையினில் ஏமாற்றும்—இதில்
எத்தனை மாறுட்டம்— [பெரும்]

காலத்தின் கைகளில் வண்டியும் மாடும்
கண்ட திசையில் அதன் மனப்போல் ஓடும்...
[கால]

எங்கு சேருமோ என்ன ஆகுமோ
இங்கில்லையோ கவனம்
எதுவரை உன் பயணம்— [பெரும்]

பாடல் 6

இயற்றியது:
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாடியவர்கள்:
ஜிக்கி & A. L. ராகவன்.

வசனம்

ஆஹா:

சலோ டில்லி! கமான் லில்லி

லில்லி:

வாட் [What]

பாட்டு

ஆஹா:

இந்தியாவின் ராஜதானி டில்லி—இனி
என்றும் என் இதயராணி லில்லி
இன்பலோக சிங்காரி நெம்பர் ஒண்ணு லேடி நீ
பந்துபோல எகிரிப்பாயும் வல்லி

உன் அன்பு வார்த்தை தான் எனக்கு மியூஸிக்கு—உன்
அழகுமுகம் செய்வதெல்லாம் மேஜிக்கு [உன்]

லில்லி:

உன் பார்வை பாடிக்கு வெரி ஹீட்டு—தெரிஞ்சுக்கோ
மீறிப்போனா எரிஞ்சு போகும் புஷ்கோட்டு

இங்லண்டுக்கு ராஜதானி லண்டன்—என்
இதயத்துக்கு உன் அன்பு எம்டன்
எதுக்கு இப்படி ஆடுறே என்னநெனச்சு வாடுறே
நெருங்கிவந்தா ரெண்டு மனசும் தனுதன்

கண்களுக்கு இமயமலை வெரி ஹைட்டு—மெய்க்
காதலுக்கு நீயும் நானும் சரிவெய்ட்டு

ஆஹா :

அப்படியே வாழ்ந்திடலாம் ஆல்ரைட்டு—நீ
அன்பு மீறிச் சொன்ன சொல்லு ஹைலேட்டு
அவர் இந்தியாவின் ராஜதானி டில்லி—இனி
என்றும் என் இதயராணி லில்லி

லில்லி : [*வசனம்*]
யூ சில்லி

ஆஹா :

இன்பலோக சிங்காரி நெம்பர் ஒண்ணு லேடி நீ
பந்துபோல எகிரிப்பாயும் வல்லி

ஆஹா :

ஹெல்புக்காக வந்த லில்லி ஒய்பு—இனி
பல்பு அண்டு சுச்சு நம்ம லைப்பு— [*ஹெல்பு*]

லில்லி :

சிங்கார ரிங்கு நான்
ரங்கூனு வைரம் நீ
நம் ஜோடி உலகில் புது டைப்பு

இருவரும் :

ஆ ! காஷ்மீருக்கு ராஜதானி ஸ்ரீ நகர்ர்ர்ர்—நம்
காதல் வாழ்வின் ராஜதானி அன்பு நகர்ர்ர்ர்
கல கலவென சிரித்து நாம்
மனசு போல நடக்கலாம்
கலந்த பின்னே வளரும் ஹேப்பி பார் எவர்ர்ர்ர்.

பாடல் 7

இயற்றியது: *பாடியவர்:*
தஞ்சை ராமையாதாஸ் P. சுசீலா

பல்லவி

முரளி : *ஹேய் !*
ஐசா பைசா உலகமடா
அசந்தா மௌளகா அரைக்குமடா
அதிலேயும் தப்பி வந்தவன் தாண்டா
ஒண்ணெ நம்பர் கில்லாடி [*ஐசா*]

ஹோ... ஹோ... ஹோ...
நைசா பேசி பாக்கெட்மேலே
கைபோட்ரான் பார் புஷ்கோட்டு—ஹேய்
கைபோட்ரான் பார் புஷ்கோட்டு
ஜல்ஸாபண்ணும் டைமன் ராஜா
ஜாக்கிரதையா டகல்வேட்டு [ஜசா]

மைனர் செயினிலும் மட்காட் தலையிலும்
மயங்காதே ஏ அம்மாளு
மாக்கான்போலே மொறச்சா உன்னை
டேக்கா கொடுப்பேன் சும்மாரு [ஜசா]

ஏமாத்தும் ஆளு இருந்தாத்தாண்டா
ஏமாந்தவனும் திருநதிடுவான்
எம்டி கில்டு ஜமகி பெல்ட்டு
எல்லாமே பகல் வேஷமடா
எல்லாமே பகல்வேஷமடா [ஜசா]

தானத்திலேயும் நிதானம் பெரிசு
தலைகனத்து நீ துள்ளாதே...ஓ.. ஓ... [தான]
தலையே உனக்குப்போனாலும சரி
வலையிலே மாட்டிக்கொள்ளாதே [ஜசா]

பாடல் 8

இயற்றியது: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
பாடியவர்: ஜிக்கி

ஹெலன்:

ஓ... ஜூலிமாலி ஜூலிமாலி ஹேபாபா ஹேபாபா
கிலிகிலி ஜிலிபிலி கிலிகிலிஜிலிபிலி
ஜாலி வாலி மாலி சோலி ஹேபாபா ஹேபாபா
[ஓ ஜூலி]

மாலை நேரம் வந்தது பாரு
மகிழும் பறவை கானம் கேளு
இன்னும் கொஞ்சம் இருந்து பாரு
இருட்டும் விடியும் இதுதான் வாழ்வு
ஹேபாபா ஹேபாபா [ஓ ஜூலி]

அசையும் ரோஜா மலரைக் கண்டால்
அழகை ரசிக்கத் தடையொன்றில்லை
அருகில் நெருங்கி பறித்துவிடாதே
அழகும் போகும் மலரும் வாடும்
ஹேபாபா ஹேபாபா [ஓ ஜூலி]

வேறு

ஏகோய் மெக்கோய் மேக்கோனேய்
ரேகோய் ஷனேய் தோக்கானேய்
பருவமும் அழகும் போய்விடுமே
பெருங்குணமதே பலன்தருமே

ஹிந்தி சீனி பாயி பாயி
என்பதை உணர்ந்தால் துன்பம் இல்லை
மானமும் பண்பும் தோழமை அன்பும்
மனிதரை உயர்த்தும் வழியன்றோ [ஏகோ]

ஒன்றே ஜாதி ஒன்றே நீதி
உன் குலம் என் குலம் எங்கே சொல்வாய்
மானமும் பண்பும் தோழமை அன்பும்
மனிதரை உயர்த்தும் வழியன்றோ [ஏகோ]

வேறு

ஹாயிலில்லா ஹாயிலில்லா ஹாயிலில்லாலீ
ஹாயிலில்லாலீ
ஹாயிலில்லா ஹாயிலில்லா ஹாயிலில்லாலீ

ஆசைக்குப் பாவமில்லை
அதைவிட வேகமில்லை
அன்புக்கு மோசமில்லை
இன்பத்தில் பேதமில்லை
அமுத பானமதே பெற வா வா........... [ஹாயி]

பாடாத சோலைவண்டு
பாடுது மோகங்கொண்டு
ஆடாத கண்ணு ரெண்டு
ஆடுது உன்னைக்கண்டு
அமுத பானமதே பெற வா வா........... [ஹாயி]

பாட்டு 9

இயற்றியது : பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | பாடியவர் : P. சுசீலா

முரளி : பார்த்தாயா மானிடனின் லீலையை—தேவா
பார்த்தாயா மானிடனின் லீலையை—தேவா
நிலையான உலகத்தையும் நேரான பழக்கத்தையும்
தலைகீழாய்ப் புரட்டிவிடும் தாறுமாறு வேலையை
[பார்]

பக்த ஜனங்கள் கவனமெல்லாம்
தினமும் கிடைக்கும் சுண்டலிலே... ஹா... ஹா...
[பக்த]

பசியும் சுண்டல் ருசியும் போனால்
பக்தியில்லே பஜனையில்லே
சுத்தமான போலிகளின் சோம்பேரி வேஷத்திலே
[சுத்த]

தொடர்ந்து உந்தன் கண்ணெதிரில்
நடந்து வரும் மோசங்களை [பார்]

ஆட்டம் போட்டுப் புரள்வதுதான்
ஆண்டவனின் சேவையா
ஆலயத்தை தரிசிக்க அலங்காரம் தேவையா
ஆளை ஆளு இடிக்கிறதும்
அடிதடியும் ஏனையா
அன்பர் கண்ணு அங்கே மொறைக்குது
கும்பிடு மட்டும் இங்கே நடக்குது
[பார்]

விண்ணும் மண்ணும் நீயானாய்
வெயிலும் மழையும் நீயானாய்
விளங்கும் அகில உலகமீது
நீயில்லாத இடம் ஏது ஹா... ஹா... ஹா...
[விண்]

காசு தந்தால்தான் உன்னைக்
காணும் வழி காட்டுவதாய்
கதவு போட்டுப் பூட்டிவைத்துக்
கட்டாயம் பண்ணுவதைப்— [பார்]

Vadapalani Press, Madras-26.


எதிர்பாருங்கள்
தென்னகத்தின் கலைக்
கோபுரமெனத் திகழும்
தனிப்பெரும் வீரசரித்திரம்
தன்னிகரில்லாத
திரைச்சித்திரமாகிறது.
சிவாஜி கணேசன்
பத்மினி
நடிக்கும்
சரவணபவா & யூனிட்டி பிக்சர்ஸ்
ராஜராஜசோழன்
டைரக்ஷன்
பி. புல்லையா பி.ஏ.
கதை-வசனம்
அரு. ராமநாதன்